# அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006

## மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு

## விடைத்தாள் ஒளிநகல் பதிவிறக்கம் செய்தல்

## செய்திக் குறிப்பு

மார்ச்/ஏப்ரல்–2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுக்கான விடைத்தாள் ஒளிநகலுக்கு விண்ணப்பித்த தேர்வர்கள் 16.06.2026 அன்று பிற்பகல் முதல் விடைத்தாள் ஒளிநகலினை பாட வாரியாக பல்வேறு கட்டங்களாக www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification–ஐ Click செய்தவுடன் SSLC Examination என்ற வாசகத்தினை Click செய்தவுடன் **"SSLC, March/April 2026 – Answer Script Scanned Copy Download"** என்ற வாசகத்தினை Click செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாள்களின் ஒளிநகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வியக்ககத்தால் இணையதளத்தில் வெளியிடப்படும் பாடவாரியான விடைத்தாள் ஒளிநகல் பதிவிறக்கம் செய்திடும் நாட்களின் விவரங்களை இவ்வலுவலகத்தின் மூலம் அவ்வப்போது செய்தி குறிப்பாக ஒரு நாள் முன்னதாக வெளியிடப்படும் எனவும், மேலும், இவ்விவரத்தினை www.dge.tn.gov.in என்ற இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டதனடிப்படையில், 16.06.2026 அன்று தமிழ், கணிதம் மற்றும் விருப்ப மொழி ஆகிய பாடங்களுக்குரிய விடைத்தாள் ஒளிநகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்ற விவரம் 15.06.2026 நாளிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, 17.06.2026 அன்று பிற்பகல் முதல் பின்வரும் பாடத்தின் விடைத்தாள் ஒளிநகலினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| பாடக்குறியீடு | பாடம் |
|---|---|
| 003 | ஆங்கிலம் |

விடைத்தாள் ஒளிநகல் பதிவிறக்கம் செய்தல் மற்றும் மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் 9498383075 / 9498383076 என்ற கைப்பேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

**இடம் : சென்னை – 6**
**நாள் : 16.06.2026**

**ஒம்/–**
**இயக்குநர்**